**செய்தி வெளியீடு எண் : 274** **நாள் : 09.02.2023**

**செய்தி வெளியீடு**

**கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சென்னையில் முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் அவர்கள் தலைமையில் சென்னை அமெரிக்க தூதரக பிரதிநிதி அவர்கள் முன்னிலையில் மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது**

*****

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் ஒழித்திடவும் மற்றும் தமிழ்நாட்டை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 9ம் தேதி கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினமாக அனுசரித்திட தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதனை முன்னிட்டு இன்று (09.02.2023) சென்னை, நுங்கம்பாக்கம், பாம்குரோவ் ஹோட்டலில் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின நிகழ்ச்சி முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சென்னை அமெரிக்க தூதரக பொருளியல்/அரசியல் பிரிவு பிரதிநிதி செல்வி. விர்சா பெர்கின்ஸ் அவர்கள் முன்னிலையில் மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை தொடங்கி வைத்து, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின "உறுதிமொழி" ஏற்றுக்கொண்டு, கொத்தடிமைத் தொழிலாளர் ஒழிப்பினில் சிறப்பாக பணிபுரிந்த பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ச.சியாமளா தேவி அவர்கள், தஞ்சாவூர் தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திரு.நா.கா.தனபாலன், சிவகங்கை மாவட்ட தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் திரு ஆர். கிஷோர்ஜி, வருவாய் கோட்டாட்சியர் (நாமக்கல்) திருமதி. டி.மஞ்சுளா, துணை ஆட்சியர் (நாமக்கல்) திரு. எம். கோட்டை குமார் ஆகியோர்களுக்கு பரிசு கேடயம் வழங்கினார். மேலும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்த மீட்கப்பட்ட முன்னாள் கொத்தடிமைத் தொழிலாளர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த திரு.சுரேஷ் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த திருமதி. குப்பம்மாள் ஆகியோர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டது.

**இந்நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில் :**

ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளர் துறை, கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. தமிழ்நாட்டில் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களும் எல்லா வசதி வாய்ப்பினையும் பெற வேண்டும் என்ற நோக்குடன் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டினை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கு தமிழ்நாடு அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஓவ்வொரு ஆண்டும், கொத்தடிமைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வுக் கூட்டங்கள் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டினை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக

மாற்றிட, 'மாநில செயல் திட்டம்' மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் உருவாக்கப்பட்டு, அதனைத் தொழிலாளர் துறை தீவிரமாக செயல்படுத்தி வருகிறது.

கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு உடனடி மறு வாழ்வு நிவாரண தொகையாக ரூ.30,000/– மற்றும் குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், வீட்டுமனை, பட்டா, வேலைவாய்ப்பு கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவி குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்படும் தொழிலாளர்களை சம்பந்தப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து உரிய திட்டங்களின் கீழ் பயன்களை அவர்கள் பெற்று வருகின்றனர்.

மேலும், ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டம் 2021–ன்படி கொத்தடிமைத் தொழிலாளர் முறை உறுதி செய்யப்படும் பட்சத்தில் ஆண் பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சமும், சிறப்பு பிரிவு பயனாளிகள் அதாவது பிச்சை எடுக்கும் தொழிலிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட குழந்தைகள், அனாதை குழந்தைகள், கட்டாய குழந்தை தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கு ரூ.2 இலட்சமும், திருநங்கைகள், ஆள் கடத்தல் மற்றும் பாலியல் வன் கொடுமைகளில் ஈடுபடுத்தப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு ரூ. 3 இலட்சமும் மறுவாழ்வு நிவாரணத் தொகையாக வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழிக்க உறுதிபூண்டுள்ள இவ்வரசு கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தினை சீரிய முறையில் அமல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கொத்தடிமைத் தொழிலாளர்களை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் பொருட்டு மாநில ஒருங்கிணைப்பு துறையாக தொழிலாளர் துறை நியமிக்கப்படுள்ளது. தொழிலாளர் துறையின் சீரிய முயற்சியால், 01.04.2017 முதல் 31.12.2022 வரை 1444 கொத்தடிமைத் தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு அவர்களுக்கு விடுதலை சான்றுகள் வழங்கப்பட்டு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3,03,73,000/– பட்டுவாடா செய்யப்பட்டு, அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுக்கான முழுமையான நிவாரண பணிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் தொடர்புடைய பல்துறை அலுவலர்கள் கொண்டு மாவட்ட அளவிலான விழிப்புணர்வு கண்காணிப்பு குழு ஒன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டு, இக்குழுக்கள் மூலம் திடீராய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கொத்தடிமைத் தொழிலாளர்களை பணியமர்த்துவோர் மீது கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் சீரிய முயற்சியினால் 2030–க்குள் "கொத்தடிமைத் தொழிலாளர் முறை" அற்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு முதன்மைச் செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும், கொத்தடிமைத் தொழிலாளர் முறை தொடர்பான விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணி, கையெழுத்து இயக்கம், மனித சங்கிலி நடத்துதல், துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சுவர் விளம்பரங்கள், Flex பேனர்கள், ஸ்டிக்கர்கள் ஒட்டுதல், கொத்தடிமைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு குறித்து உள்ளூர் கேபிள் டி.வி வானொலி மற்றும் பத்திரிக்கைகள் மூலம் விளம்பரங்கள் செய்தல், தெருக்கூத்து நடத்துதல், பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பொருட்டு, மாணவர்களுக்கு ஓவிய போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு அலுவலகங்களில் கொத்தடிமைத் தொழிலாளர் முறைக்கு எதிராக "உறுதிமொழி" எடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாநில சட்டப் பணிகள் ஆணைய மாண்பமை சார்பு நீதிபதிகள் திருமதி. டி.ஜெயஸ்ரீ அவர்கள், திருமதி. ஆர்.தமிழ்ச் செல்வி அவர்கள், காவல் கண்காணிப்பாளர் (மகளிர் மற்றும் குழந்தைகள் எதிரான குற்றப் பிரிவு) திருமதி. வி.ஜெயஸ்ரீ, இ.கா.ப., அவர்கள், காவல் துணை ஆணையாளர் திருமதி.ஜி.வனிதா அவர்கள், பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி ச.சியாமளா தேவி அவர்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு.எம்.வி.செந்தில் குமார், கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், தொழிலாளர் இணை ஆணையர்கள், கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் தொடர்புடைய பிற துறை அலுவலர்கள், தொண்டு நிறுவனங்கள், தொழிலாளர் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**